A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 13 / 2023**

திரு. சா. ஆதி, த/பெ. சாமிக்கண்ணு,
அரசின காலனி, கரடிசித்தூர் கிராமம் – அஞ்சல்,
சின்னசேலம் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 207.

………மேல்முறையீட்டாளர்
(திரு. சா. ஆதி &
Rep by திரு G. சுக்கேரி)

எதிர்

செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர், அண்ணா நகர்,
கள்ளக்குறிச்சி – 606201.

. . . எதிர்மனுதாரர்
(திரு M. கணேசன், செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி)

**மனு பெறப்பட்ட நாள்: 02-02-2023**

**கேட்புரை நாள்: 24-04-2023**

**ஆணை நாள்: 02-05-2023**

02.02.2023 அன்று பெறப்பட்ட திரு. சா. ஆதி, த/பெ. சாமிக்கண்ணு, அரசின காலனி, கரடிசித்தூர் கிராமம் – அஞ்சல், சின்னசேலம் தாலுக்கா, கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606 207 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 13/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.04.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை

நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

தனக்கு சொந்தமான கரடிசித்தூர் கிராம சர்வே எண்.134/2C–இல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 சின்னசேலம் வட்டம், கரடிசித்தூர் கிராமம், அரிசன காலனியை சேர்ந்த திரு.சா.ஆதி தனக்கு சொந்தமான கரடிசித்தூர் கிராம சர்வே எண்.134/2C–ல் உள்ள கிணற்றிற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் விவசாய மின்இணைப்பு வேண்டி 2021–இல் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 தாட்கோ என்பது அரசால் வழங்கப்படும் சிறப்பு திட்டம் என்பதால் வாரிய உத்திரவு அளிக்கப்பட்டால் அதன் அடிப்படையிலோ அல்லது தாட்கோ முன்னுரிமையில் மின்இணைப்பு வழங்க மேலாளர் / தாட்கோ அலுவலகம் மூலம் பரிந்துரை பெறப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, சர்வே எண்.134/2C–இல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டத்தை மேல்முறையீட்டாளர் அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் 30.11.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.11.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*திரு ஆதி, த/பெ.சாமிக்கான்னு கரடிசித்தூர் அவர்களின் விவசாய விண்ணப்ப எண்.056/25.08.2011 பதிவு செய்யப்பட்டு சுயநிதி திட்டம் ரூ.25,000/- அடிப்படையில் மின் இணைப்பு வழங்க துவக்க தொகை ரூ.500/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி கிணறு மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் வெட்டப்பட்டு இருப்பதால் தாட்கோ அடிப்படையில் மனுதாரர் விண்ணப்பித்து மின் இணைப்பு கோருகிறார். இது சிறப்பு திட்டம் என்பதால் வாரிய உத்தரவு அளிக்கப்பட்டால் அதன் அடிப்படையிலோ அல்லது தாட்கோ அலுவலகம் மூலம் வரப்பெறும் பரிந்துரை அடிப்படையில் வரிசை கிரமமாகவோ மின் இணைப்பு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 24.04.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. சா. ஆதி மற்றும் திரு G. சுக்கேரி ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.3 எதிர்மனுதாரர் திரு M. கணேசன், செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி, கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேல்முறையீட்டாளர் தான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், தான் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்த சிறு விவசாயி எனவும், கரடிசித்தூர் (தெ) அ.பு.ச.134/2C/75– ஏக்கர் மானாவாரி புஞ்சை நிலம் உள்ளதாகவும், அதில் கிணறு வெட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் கள்ளகுறிச்சி BDO ஆபீசில் ஒர்க் ஆர்டர் கொடுத்ததாகவும், அதன்படி ஜெனரேட்டர் வாடகை வாங்கி 15 கெஜம் கிணறு வெட்டி முடித்ததாகவும், ஆனால் நிரந்தரமாக கிணற்றில் தண்ணீர் இறைத்து பயிரிட்டு பிழைக்க மின் இணைப்பு இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 இதனால் மின் இணைப்பு வழங்க கோரி தாட்கோ மேலாளர், மின்துறை செயற்பொறியாளர், BDO, கலெக்டர், சி.எம். செல் ஆகியோருக்கு கடந்த 2021–இல் விண்ணப்பித்ததாகவும், ஆனால் தன் கிணற்றுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை எனவும், இதனால் கிணறு இருந்தும் தான் பயிரிட்டு பிழைக்க மின் இணைப்பு இல்லாமல் வாழ வழி இன்றி தவிப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேலும் மேல்முறையீட்டாளர் தன் கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவிட கோரி தலைவர் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மேற்பார்வை பொறியாளர் அலுவலகம், கள்ளகுறிச்சி மின்பகிர்மான வட்டம் கள்ளகுறிச்சி– 606 202 (க.கு.மா) என்ற முகவரிக்கு விண்ணப்ப மனு அனுப்பியதாகவும் அதற்கு முறையீட்டு படிவம் பூர்த்திசெய்து அனுப்புமாறு தனக்கு தபால் அனுப்பியதாகவும் அதன்படி முறையீட்டு படிவம் பூர்த்தி செய்து அனுப்பியதாகவும், அதன்பேரில் கடந்த 24–11–2022ல் தன்னை விசாரணை செய்தபின் விசாரனை பற்றிய தீர்ப்பு நகல் தனக்கு அனுப்பியுள்ளதாகவும், அது கடந்த 20–12–2022ல் தனது கைக்கு கிடைத்ததாகவும், அதில் 3வது பக்கத்தில் 1000ம் நபர்களுக்கு தாட்கோ அடிப்படையில் மின் இணைப்பு வழங்க உத்திரவிடப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதில் தன் பெயர் இடம் பெறவில்லை எனவும், ஆனால் தாட்கோ அடிப்படையில் வழங்கும் 1000ம் மின் இணைப்புகளில் மின் இணைப்பு பெறப்பட்ட விவசாயிகள் போக விடுப்பட்ட விவசாயிகளின் மின் இணைப்புகள் மீதி காலியாக இருந்தால் அதில் கருணை அடிப்படையில் தன் கிணற்றுக்கு ஒரு மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 சின்னசேலம் வட்டம், கரடிசித்தூர் கிராமம், அரிசன காலனியை சேர்ந்த திரு.சா.ஆதி. த/பெ.சாமிகண்ணு அவர்களுக்கு சொந்தமான கரடிசித்தூர் கிராம சர்வே எண்.134/2C–ல் உள்ள கிணற்றிற்கு சாதாரண முன்னுரிமை அடிப்படையில் விவசாய மின்இணைப்பு வேண்டி பதிவு எண்.056/25.08.2021, மின்பளு 5.0 HP–ன்படி பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி விண்ணப்பத்திற்கு சுயநிதி திட்டம் ரூ.25,000/– அடிப்படையில் மின்இணைப்பு வேண்டி துவக்கத்தொகை ரூ.500/– 09.11.2021–ல் செலுத்தியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேலும் திரு.சா.ஆதி, த/பெ.சாமிகண்ணு அவர்கள் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு தாட்கோ முன்னுரிமையில் மின்இணைப்பு வேண்டி விழுப்புரம் தாட்கோ மேலாளர் அவர்களின் இணையதள முகவரிக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அதற்கு மின்இணைப்பு வேண்டியும் தலைவர்/கூடுதல் தலைமைப் பொறியாளர்/மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றம் / கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் / கள்ளக்குறிச்சி அவர்களுக்கு (CGRF) மனு அளித்துள்ளார் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி (CGRF) மனு அடிப்படையில் கடந்த 24.11.2022 அன்று நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து வழங்கப்பட்ட தீர்ப்புரையில் தாட்கோ அலுவலக Lr.No.7/Dt.10.02.2022–ன் படியும் Lr.No.CE/D/S&RL/SE/RE&1/(D)/EE/ RE/A2/F.Thadco/691/Dt.23.11.2022–ன் படியும் வரப்பெற்ற ஆணைப்படி 1000 நபர்களுக்கு தாட்கோ அடிப்படையில் மின்இணைப்பு வழங்க பரித்துரை செய்யப்பட்டிருந்ததாகவும், அதில் திரு.சா.ஆதி அவர்களின் பெயர் இடம் பெறவில்லை எனவும். எனவே தாட்கோ முன்னுரிமையில் மின்இணைப்பு வழங்க

தற்போது வாய்ப்பில்லை எனவும், தாட்கோ அலுவலகம் மூலம் வரப்பெறும் பரிந்துரை அடிப்படையில் வரிசைக்கிரமமாக மின்இணைப்பு வழங்கப்படும் எனவும் அவருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்நிலையில் தற்போது மனுதாரர் மேற்கண்ட 1000 பயனாளிகளின் பட்டியலில் மின்இணைப்பு வழங்க தகுதியில்லாத விண்ணப்பத்தினை கண்டறிந்து அதில் அந்த விண்ணப்பத்திற்கு பதிலாக தன்னுடைய பெயர் சேர்த்து தாட்கோ திட்டத்தில் தனக்கு மின்இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டு மனு (Ombudsman) அளித்துள்ளதாகவும், தாட்கோ திட்டத்தின்கீழ் கடந்த 2017-2018 வரை பதிவு செய்துள்ளவர்களுக்கு மட்டுமே அரசின் இலக்கீட்டின் அடிப்படையில் தற்போது மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பயனாளிகளின் பட்டியலில் தகுதியில்லாத விண்ணப்பம் இருக்கும் பட்சத்தில் தாட்கோ அலுவலகத்தில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களின் பட்டியலில் வரிசைப்படி அடுத்ததாக உள்ள விண்ணப்பதாரருக்குத் தான் முன்னுரிமை கிடைக்குமே தவிர மனுதாரரான திரு.சா.ஆதி, த/பெ.சாமிகண்ணு அவர்களுக்கு அந்த முன்னுரிமை கிடைக்காது எனவும், ஏனெனில் மனுதாரர் 2021-2022-இல் தான் தாட்கோ திட்டத்தின் கீழ் மின்இணைப்பு கோரி தாட்கோ அலுவலகத்தில் விண்ணப்பம் பதிவு செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் தாட்கோ என்பது அரசால் வழங்கப்படும் சிறப்பு திட்டம் என்பதால் வாரிய உத்திரவு அளிக்கப்பட்டால் அதன் அடிப்படையிலோ அல்லது தாட்கோ மூலம் பரிந்துரை செய்து வரப்பெறும் பட்டியயில் உள்ளவர்களுக்கு மட்டுமே வரிசைக்கிரமமாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், எனவே திரு.சா.ஆதி, த/பெ.சாமிகண்ணு கரடிசித்தூர் அவர்களுக்கு தாட்கோ முன்னுரிமையில் மின்இணைப்பு வழங்க மேலாளர் / தாட்கோ அலுவலகம் மூலம் பரிந்துரை பெறப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் தான் ஆதிதிராவிட வகுப்பை சேர்ந்த சிறு விவசாயி எனவும், தனக்கு கரடிசித்தூர் தெற்கு எல்லையில் அ.பு.ச.134/2Cல் 1.76 ஏக்கர் பட்டா நிலம் உள்ளதாகவும், தன்னிடம் உள்ள கிணற்றில் இருந்து நீர் இறைத்து பாசனம் செய்து பயிரிட மின் இணைப்பு இல்லை எனவும், ஆகவே 05-07-2021-இல் விழுப்புரம் மாவட்ட தாட்கோ மேலாளர் அவர்களுக்கு விண்ணப்பித்த நிலையில் 26-07-2021-இல் தாட்கோ அலுவலகத்திலிருந்து வந்த கடிதத்தின் அடிப்படையில் அனைத்து ஆவணங்களையும் தாட்கோ இணைய தள முகவரிக்கு அனுப்பியதாகவும், இதவரை மின் இணைப்பு வழங்கவில்லை எனவும், ஆகவே, மின்துறை மூலம் இலவச துரித மின் இணைப்பு திட்டத்தில் அவருடைய கிணற்றுக்கு மின் இணைப்பு வழங்க செயற்பொறியாளர்/இ.ப/கள்ளகுறிச்சி உத்திரவிட முறையிட்டுள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுறையில் செயற்பொறியாளர் கோட்டத்தில் 31-03-2006 வரை சதாரண முன்னுரிமை திட்டத்தில் பதிவு செய்த மனுதாரர்களுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

7.4 மேலும், மேல்முறையீட்டாளர் சாதாரண முன்னுரிமை அடிப்படையில் திரு.ஆதி, த/பொ. சாமிக்கண்ணு கரடிசித்தூர் சர்வே எண்.134.2C-ல் உள்ள கிணறு 056/25.08.21 மின்பளு 5 HP. படி பதிவு செய்துள்ளர். மேலும் மேற்படி விண்ணப்பம் சுயநிதி திட்டத்தின் மூலம் ரூ.25000/-இன் அடிப்படையில் மின் இணைப்பு வேண்டி துவக்க தொகை ரூ.500/- 09-11-2021-இல் செலுத்தியுள்ளார்.

7.5 தற்பொழுது மேல்முறையீட்டாளர் மேற்கண்ட விண்ணப்பத்திற்கு தாட்கோ முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வேண்டி தாட்கோ மேலாளர் அவர்களின் இணைய தள முகவரிக்கு விண்ணப்பித்துள்ளார் அதன் அடிப்படையில் மின் இணைப்பு வழங்குமாறு கோருவதாக தெரிவித்துள்ளார்.

7.6 மேலும் எதிர்மனுதாரர் G.O.No.7-இல் 10-02-2022. படி Lr.No.CE/P&RC/SE/RE(ICO)/ EE/RE/A2/F.TANGEDCO /691/dt.23-11-2022-ல் இன்படி 1000 நபர்களுக்கு தாட்கோ திட்டத்தில் 2017/2018 வரை அரசின் இலக்கின் மூப்பின் அடிப்படையில்

வழங்கப்பட்டதாகவும், இதில் மேல்முறையீட்டாளரின் பெயர் இடம் பெற இல்லை எனவும், எனவே தாட்கோ முன்னுரிமையின் அடிப்படையில் இலவச விவசாய மின் இணைப்பு வழங்க தற்சமயம் வாய்ப்பில்லை என வாதிட்டார்.

7.7 இந்நிலையில் மேல்முறையீட்டாளரோ தாட்கோ திட்டத்தில் பதிவு செய்த விண்ணபத்திற்கு 2017–18 ஆம் ஆண்டில் 1000 பயனீட்டாளர்களில் ஏதேனும் மின் இணைப்பு பெறாத பயனீட்டாளர்கள் இருப்பினும் அதை கருத்தில் கொண்டு தனக்கு கருணை அடிப்படையில் வழங்க மேல்முறையீடு செய்ய முறையிட்டது தெரிய வருகிறது.

7.8 மேல்முறையீட்டாளர் 2021–22–இல் தாட்கோ திட்டத்தில் பதிவு செய்து 2017–18–இல் விடுப்பட்ட பயனீட்டாளர்கள் எவரேனும் இருப்பினும் அந்த முன்னுரிமையில் மின் இணைப்பை தனக்கு தர வலியுறுத்துவது தாட்கோ அலுவலகத்தில் தான் முடிவு செய்யும் அதிகாரம் உள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, மேல்முறையீட்டாளர் உரிமைதாரரிடம் எழுப்பும் மேற்கண்ட கோரிக்கைக்கு நிவாரணம் வழங்க இயலாது என முடிவு செய்யப்படுகிறது. இந்நிலையில், மேல்முறையீட்டாளர் தாட்கோ அலுவலகத்தின் மூலம் இலவச விவசாய மின் இணைப்பு பெற சிறப்பு அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தால் அந்த ஆவணங்களின் அடிப்படையில் எதிர்மனுதாரர் உரிய தொடர் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே மின்குறைதீர்ப்பு மன்றம் / கள்ளகுறிச்சி வழங்கிய தீர்ப்புரை சரியாகப்படுவதால் தற்சமயம் மேல்முறையீடு செய்யும் அதே கோரிக்கைக்கு எந்த தீர்வும் வழங்க இயலாது என்பதால் இவ்வழக்கு முடித்து வைக்கப்டுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 13/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>

1. திரு. சா. ஆதி, த/பெ. சாமிக்கண்ணு, – By RPAD
அரசின காலனி, கரடிசித்தூர் கிராமம் – அஞ்சல்,
சின்னசேலம் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி மாவட்டம் – 6063 207.

2. செயற்பொறியாளர்/ கள்ளக்குறிச்சி,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
செயற்பொறியாளர் அலுவலக வளாகம்,
ராஜம்மாள் நகர், அண்ணா நகர்,
கள்ளக்குறிச்சி – 606201.

3. மேற்பார்வை பொறியாளர், <u>– By Email</u>
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.